செ.வெ.எண். 23/டிசம்பர் தேதி : 18.12.2016

## தருமபுரி மாவட்டம்

## சிறுபான்மையினர் உரிமைகள் தின விழாவில் 62 பயனாளிகளுக்கு ரூ. 23 இலட்சத்து 65 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.




தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கூட்டரங்கில் சிறுபான்மையினர் உரிமைகள் தின விழாவில் 10 மற்றும் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெற்ற 13 சிறுபான்மையின மாணவ, மாணவிகளுக்கு உதவித்தொகையாக ரூ. 36 ஆயிரமும், உலமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரியத்தின் மூலம் 20 நபர்களுக்கு ரூ. 80 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்டங்களும், சிறுபான்மையினர் பொருளாதார முன்னேற்ற கழகத்தின் சார்பில் 24 பயனாளிகளுக்கு சிறு வணிக கடனாக ரூ. 12 இலட்சத்து 82 ஆயிரத்து 500/-ம், 5 சிறுபான்மையின மகளிருக்கு ரூ. 17 ஆயிரத்து 250/- மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரம் என மொத்தம் 62 பயனாளிகளுக்கு ரூ. 23 இலட்சத்து 65 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தருமபுரி மாவட்டத்தில் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின் தங்கிய பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன்களை பாதுகாப்பதில் தமிழ்நாடு அரசு முன்னோடியாக திகழ்வதுடன் இப்பிரிவினரின் மேம்பாட்டிற்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு 6-ம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்புவரை கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ. 2 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள மாணவ, மாணவியர்களுக்கு உரிய ஆவணங்களுடன் சம்மந்தப்பட்ட கல்வி நிறுவனங்கள் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரை அணுகி கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம். அதேபோல் மாவட்ட அளவில் முதல் 3 இடங்களை பெறும் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ. 1 இலட்சத்துக்கு மிகாமல் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மாணவ மாணவியர்களுக்கு பொது பரிசு வழங்கப்படுகிறது. முதலமைச்சரின் தகுதி பரிசு மூலம் 12-ம் வகுப்பில் மாநில அளவில் அதிக மதிப்பெண் பெறும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர்களில் முதல் 1000 மாணவ, மாணவியர்களுக்கு அவர்கள் பயிலும் பட்டபடிப்பு/தொழிற்படிப்பு/பட்டயப்படிப்பு காலம் முடியும் வரை ஆண்டுகளுக்கு தலா ரூ. 3000/-மும், விலையில்லா மிதிவண்டிகள், தையல் இயந்திரம், சலவை பெட்டிகள் போன்றவை வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் தொழில்மையம் மூலம் தொழில் முனைவோர்களுக்கான ரூ. 10 கோடி நிதி ஒதுக்கீட்டில் தற்போது தமிழக அரசு ரூ. 5 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. இதில் சிறுபான்மையின மக்கள் தொழில் மையத்தின் மூலம் அரசு மானியத்துடன் வழங்கும் ரூ. 5 இலட்சத்திற்கான புளி பதப்படுத்தும் இயந்திரத்தினை சுய உதவிக் குழுக்கள் மூலம் பெற்று பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனவும், ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் ரூ. 3 ஆயிரத்து 800 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தனி நபர் கழிப்பறை அமைக்க ரூ. 12 ஆயிரம் அரசு வழங்கி வருகிறது. இதனை பெற்று தனிநபர் கழிப்பறை அமைத்துக்கொள்ள வேண்டும். அதேபோல் மாவட்ட வழங்கல் துறையின் மூலமாக நமது மாவட்டத்தில் புதிய குடும்ப அட்டை வேண்டி 11 ஆயிரம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு 5 ஆயிரம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சிறுபான்மை மக்களுக்கென நபர் ஒருவருக்கு விலையில்லா 5 கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது. தற்போது அனைத்து நியாய விலைக்கடைகளிலும் உணவுப்பொருட்கள் பெற்றுக்கொள்ள அரசு கணினிமயமாக்கப்பட்டு பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் குடும்ப அட்டைதாரர்களும் நியாய விலைக்கடைகளில் தங்களுடைய தொலைபேசி எண்களை பதிவு செய்து கொள்ளவேண்டும்.

நமது மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் மூலம் சிறுபான்மையின மக்கள் உறுப்பினர்களாக பதிவு செய்து கூட்டுறவு துறையின் மூலம் வழங்கப்படும் பயிர் கடன் மற்றும் தொழிற்கடன் குறைந்த வட்டியில் கடன் பெற்று பயன்பெற வேண்டுமெனவும், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் கணினி மூலம் இலவசமாக விண்ணப்பித்து பதிவு செய்து கொண்டால் 60 வயதிற்கு பிறகு மாதாந்திர உதவித்தொகை மற்றும் இழப்பீட்டு தொகை போன்ற அனைத்து சலுகைகளையும் பெறலாம். உலமாக்களுக்கு மாதாந்திர உதவித்தொகை ரூ. 1000/- ஆக வழங்கப்பட்டு வந்தது. தற்பொழுது ரூ. 1500/-ஆக உயர்த்தியும், மேலும் மெக்கா செல்ல வருடத்திற்கு 2000 நபர் மட்டுமே செல்ல அனுமதிக்கப்பட்டனர். தற்போது ஏழை, எளிய சிறுபான்மையினர் செல்ல 4000 நபர்கள் வரை சென்று வர அனுமதிக்கப்படுகிறது.

தமிழக அரசால் சிறுபான்மையின மக்களுக்கு வழங்கக்கூடிய அனைத்து விதமான சலுகைகளையும் கேட்டறிந்து முறையாக விண்ணப்பித்து சிறுபான்மையின மக்கள் அதன் பயன்களை முழுமையாக அடையுமாறு மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு. அமீர்பாஷா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு. க. பாண்டியன், சிறுபான்மை நல பிரிவு திரு. எ. அன்வர்பாஷா, தலைமை காஜி திரு. ஹணிபஸேலே கரீம் சாய்பு, ஜமாத்தலைவர் திரு. ஏ.எம். அப்துல்காதர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. இரா. சண்முகசுந்தரம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.